

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 99 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - கார்த்திகை 02 - சனிக்கிழமை 18 நவம்பர் 2023 - கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 99: Thiruvalluvar Year - 2054 - Karthigai 02 - Saturday 18 November 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் நிலையில் - 10 மசோதாக்களை திருப்பி அனுப்பிய ஆளுநர்!

# தமிழ்நாடு சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது!

## மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்ப முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

**சென்னை, நவ. 18-**

**சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் நீண்ட காலமாக நிலுவையில் வைத்திருப்பதற்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பணிந்துள்ளார். நேற்று முன்தினம் 10 மசோதாக்களை அரசுக்கு ஆளுநர் அனுப்பியுள்ள நிலையில் சட்டமன்ற சிறப்புக் கூட்டம் இன்று (18.11.2023 - சனிக்கிழமை) நடைபெறுகிறது. இதில் அந்த மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்பிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.**



சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்பட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை ஆளுநர் ஆர்.என்.ரவியால்முடக்கப்பட்டிருப்பதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மாநில பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் மசோதா,

தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா,

அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணைவேந்தரை தமிழ்நாடு அரசே நியமிக்க அதிகாரம் அளிக்கும் மசோதா உள்ளிட்டவற்றை ஆளுநர் ஆர்.என். ரவி கிடப்பில் போட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆளுநரால் நெடு நாளாக கிடப்பில் போடப்பட்ட மசோதாக்கள்!**

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் மற்றும் கால்நடைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு நடத்த அரசுக்கு அதிகாரம் அளிக்கும் மசோதாக்கள் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளாக குறைப்பது தொடர்பான மசோதா மதுரை, கோவை, திருப்பூர், ஒசூர் நகர வளர்ச்சிக் குழுமங்கள் உருவாக்குவது தொடர்பான தமிழ்நாடு நகர ஊரமைப்பு திட்ட மசோதா உள்ளிட்டவற்றையும் ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்.

இதுதவிர, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி. ரமணா மீதான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ. கோரிய அனுமதிக்கான கோப்புகளிலும் கையெழுத்திடாமல் உள்ளார். இதேபோல், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி, எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்குநரகம் இசைவு ஆணை கோரிய கோப்பிலும் ஆளுநர் கையெழுத்திடாமல் உள்ளார். அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என்று மனுவில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஆளுநர் ஆர்.என்.ரவி பறித்து வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஆளுநரின் செயல்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்த உச்சநீதிமன்றம்!**

இந்த மனுவை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டு மிக முக்கியமானவை என்று தெரிவித்தது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவித்தனர். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கு வரும் 20ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

**ஜனநாயகத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஆளுநர்கள்!**

இதற்கிடையே, கடந்த வாரம் பஞ்சாப் மாநில ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றம், சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்றும், ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார் என்றும் கண்டனம் தெரிவித்தது.

மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில் போட்டிருப்பார்? என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன. அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிக அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குபவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சாசனம் இயற்றப்பட்டுள்ளது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**உச்சநீதி மன்ற உத்தரவுக்கு பணிந்த ஆளுநர் ரவி!**

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் கண்டனம் எதிரொலியால், ஆளுநர் மாளிகையில் நீண்ட காலமாக கிடப்பில் போட்டிருந்த 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார். சில மசோதாக்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் இருந்த நிலையில், இத்தனை நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தற்போது உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பணிந்துள்ளார்.

இதனையடுத்து தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் இன்று (சனிக்கிழமை) நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்கள் மீண்டும் இயற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்படும். அதற்கு ஆளுநர் ஒப்புதல் தந்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். மாநில அரசின் சட்டங்களை மதிக்காத ஆளுநர்களை உச்சநீதிமன்றம் கடுமையாக சாடியுள்ள நிலையில் மேற்கண்ட நடவடிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

> **சென்னை பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா, தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா, தமிழ் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா, தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,**
>
> **அண்ணா பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா ஆகிய 10 மசோதாக்களை ஆளுநர் மாளிகை திருப்பி அனுப்பியுள்ளது.**

---

## திருப்பூர் தாராபுரம் சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.18-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மணக்கடவு கிராமம், ஆலங்காட்டுப்பிரிவு என்ற இடத்தில் 16.11.2023 அன்று மாலை டேங்கர் லாரியும், நான்கு சக்கர வாகனமும் நேருக்குநேர் எதிர்பாராதவித மாக மோதிய விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தாராபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (வயது 65), அவரது மனைவி திருமதி. செல்வி (வயது 50), கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், வஞ்சியம்மா நகரைச் சேர்ந்த தமிழ்மணி (வயது 50), அவரது மனைவி திருமதி.சித்ரா (வயது 45) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திண்டுக்கல்லைச் சேர்ந்த திருமதி.கலாராணி (வயது 55) என்பவர் தாராபுரம் அரசு மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்:

*சென்னை, நவ.18-*

*தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் 6 பேரை பணியிடமாற்றம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா வெளியிட்டுள்ள உத்தரவு வருமாறு:-*

*சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளராக பிரதாப், ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இணைசெயலாளராக ரத்னா, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை ஆணையராக ஜெயகாந்தன்,*

*சி.எம்.டி.ஏ தலைமை நிர்வாக அலுவலராக காயத்ரி கிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இணை மேலாண் இயக்குனராக விஜய கார்த்திகேயன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குனராக ஸ்ரேயா பி.சிங் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---

## தமிழ்நாட்டில் மழை படிப்படியாக குறையும்: வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, நவ. 18-*

*வங்கக் கடலில் வலுப்பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒடிசா நோக்கி நகர்வதாகவும், தமிழ்நாட்டில் மழை படிப்படியாக குறையும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக இந்தியவானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:*

*தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய மேற்குவங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, விசாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 510 கி.மீ. தென்கிழக்கே நிலை கொண்டுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து நவ. 16 அன்று ஆந்திர கடலோர பகுதிகளை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல்பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வடக்கு, வடகிழக்கு திசையில் திரும்பி ஒடிசா கடலோர பகுதிகளில் நிலவியது.*

*இலங்கை கடலோர பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று முதல் வரும் 19ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். 20, 21ம்தேதிகளில் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். படிப்படியாக மழை குறையும்.*

*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் இடி,மின்னலுடன் மிதமான மழை பெய்யக் கூடும்.*

*தமிழ்நாட்டில் கடந்த அக்.1 முதல் நவ.15 வரை சராசரியாக 24 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இந்த காலகட்டத்தில் வழக்கமாக 27 செ.மீ. மழை பதிவாகும்.*

**1ஆம் எண் புயல் எச்சரிக்கை**

*நாகை துறைமுக அலுவலகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நேற்று முன்தினம் ஏற்றப்பட்டது.*

*மத்திய மேற்கு வங்கக் கடலில் விசாகப்பட்டினத்துக்கு தென் கிழக்கே 510 கிலோ மீட்டர் தொலைவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளது.*

*எனவே, தொலை தூரத்தில் புயல் சின்னம் உருவாகி இருப்பதை பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையில், நாகை துறைமுக அலுவலகத்தில் நேற்று முன்தினம் மதியம் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.*

*இதேபோல, காரைக்காலில் உள்ள தனியார் துறைமுகத்திலும் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நேற்று முன்தினம் ஏற்றப்பட்டது.*

கூட்டுறவுத் துறையில் பணி நியமனங்கள் ஒளிவுமறைவின்றி நடைபெறுகின்றன!

# அண்ணாமலை புரியாமல் பேசுகிறார்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பதிலடி!



சென்னை, நவ. 18 -

“கூட்டறவுத்துறையில் பணி நியமனங்கள் ஒளிவு மறைவின்றி நடைபெறுகிறது. பா.ஜ.க. அண்ணாமலை புரியாமல் பேசுகிறார்” என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் நேற்று முன்தினம் (16.11.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக பணிகளுக்கான தேர்வு நடத்தப்பட்டு துறை வாரியாக பணியில் சேருவதற்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் 14 சுருக்கெழுத்தர் மற்றும் 18 தட்டச்சர் (Shorthand and Typist) மொத்தம் 32 நபர்களுக்கு பணியாணைகளை முதலமைச்சர் ஏற்கனவே இந்த பணியாணை வழங்குகின்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அந்த அடிப்படையில், அந்தந்த துறையின் அமைச்சர்கள் அவர்களுக்கான பணியாணைகளை வழங்கலாம் என்று அறிவுறுத்தி இருந்தார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறைக்கென்று இன்று 32 படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை முதலமைச்சர் அவர்களுடைய இந்த நல்லரசு ஏற்படுத்தியிருக்கிறது.

ஆகவே, அப்படிப்பட்ட அந்த பணி வாய்ப்பை பெற்ற இளைஞர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை எனது சார்பிலும், கூட்டுறவுத் துறையின் சார்பிலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறோம். ஒவ்வொருடைய பெற்றோர்களும் அவர்களை பெற்றெடுத்து வளர்த்து, இந்த சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு அவர்களை கொண்டு வர வேண்டும் என்று விரும்புவது ஒவ்வொரு பெற்றோருடைய எண்ணம். அந்த எண்ணத்தை இன்றைக்கு இந்த 32 பணியாணைகளை பெற்றிருக்கக்கூடிய பிள்ளைகள் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்றால் இது பெற்றோர்களுக்கு ஒரு மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

அதே நேரத்தில் இந்த பணி வாய்ப்பைப் பெற்றவர்கள் எதிர்காலத்தில் அடுத்த தலைமுறையினரை, சந்ததியினரை நல்ல கல்வியாளர்களாக உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இந்த பணியாணை அமைந்திடும் என்பதையும், அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் விரும்புகிறார்கள்.

**உயர்கல்வி படித்தவர்கள் அதிகரிப்பு!**

நம்முடைய மாநிலம் கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருக்க வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அப்படி எடுக்கின்ற அந்த முயற்சிகளின் அடிப்படையிலேதான், ஒட்டுமொத்த இந்தியாவின் உயர்கல்வி படித்தவர்களின் சராசரி சதவீதம் அகில இந்திய அளவில் 24 என்ற விகிதாச்சாரத்தில்தான் எட்டியிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் உயர்கல்வி படித்தவர்களுடைய சதவீதம் இரண்டு மடங்குக்கு மேலாக 54 சதவீதம் உயர்கல்வி படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, கல்வியில் முன்னேறிய மாநிலமாக நம்முடைய தமிழ்நாட்டில் படித்து வரக்கூடிய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று முதலமைச்சர் அரசு பணியில் இருக்கக்கூடிய காலி பணியிடங்களை நிரப்புவதற்கு துறைவாரியாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப் போல, புதிய தொழில்கள் தொடங்குவதற்கான எல்லா வகையான நல்ல சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கின்ற காரணத்தால், பிற மாநிலங்களிலிருந்தும், அதைப்போல பிற வெளிநாடுகளிலிருந்தும், பெரும் முதலீடுகளோடு தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு தொழில் முனைவர்கள் வருகிறார்கள்.

**நற்பெயரை பெற்றுத்தாரீர்!**

ஆகவே, படிக்கக்கூடிய அனைவருக்கும் இப்பொழுது வேலைவாய்ப்பு விரைந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இன்று பணி ஆணைகளை பெறக்கூடிய நம்முடைய இளம் சந்ததியினர் பணியாற்றுகின்ற இடங்களில் அவருடைய உயர் அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு கீழே பணியாற்றக் கூடிய ஒரு நிலையில் மதித்து நடந்து, நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக மேலதிகாரிகள் சொல்லக்கூடிய அந்த உத்தரவுகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும் என்பதையும், இப்பொழுது பெற்றிருக்கக் கூடிய இந்த பணி ஆணையில் நீங்கள் அமர்ந்திருக்கக் கூடிய இந்த பொறுப்பு என்பது இன்னும் எதிர்காலத்தில் உங்களுக்கு பல பதவி உயர்வு, பொறுப்புகளில் உயர்வதற்கான உழைப்பை நீங்கள் செலுத்தி, நற்பெயரை உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்தாருக்கும் ஒட்டுமொத்த நாட்டிற்கும் நீங்கள் ஈட்டித் தரவேண்டுமென்று உங்களையெல்லாம் அன்போடு வாழ்த்தி வருக வருக என வரவேற்கிறேன்.

**கேள்வி:** கூட்டுறவுத் துறையில் மீதமுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்பு ஏதாவது வெளியிடப்பட்டிருக்கிறதா? மற்ற பணியிடங்களை நிரப்புவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** ஏற்கனவே 38 மாவட்டங்களில் விற்பனையாளர்கள், கட்டுநர்கள் பணிக்காக 5,500 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு விருப்ப மனுக்கள் பெறப்பட்டு, சற்றொப்ப நாலரை லட்சம் நபர்கள் அதற்காக விண்ணப்பித்திருந்தார்கள். மூன்றே முக்கால் லட்சம் பேர் நேர்முகத் தேர்வுகளில் கலந்துகொண்டிருந்தார்கள். முறையாக தேர்வு செய்யப்பட்டு மதிப்பெண் அடிப்படையில் பணியாணை இப்பொழுது அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. 38 மாவட்டத்தில், 36 மாவட்டங்களில் அந்த பணி சிறப்பாக முடிந்தது. விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற பணி நியமன பணிகள் நடைபெற்ற நேரத்தில் ஏற்பட்ட குறைகளின் காரணமாக அந்த மாவட்டம் அப்போது பிரிக்கப்படாமல், முழுமையாக இருந்தது. அது சம்பந்தமான வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. ஆகவே அதை தவிர்த்து 36 மாவட்டங்களிலும் அந்த பணி சிறப்பாக முடிந்திருக்கிறது.

**கேள்வி :** 257 உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தேர்ந்தெடுக்காமல், நேரடியாக தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவசியம் என்ன? என்று பாஜக தலைவர் அண்ணாமலை கேட்டிருக்கிறார். இது குறித்து....

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** அவர்தான் தவறுதலாக, புரிதல் சரியில்லாமல் சொல்லிவிட்டாரே தவிர, கூட்டுறவுக்கென்று தனி சட்டம் இருக்கிறது. பணியாளர்களை எவ்வாறு தேர்வு செய்வது போன்ற தனி சட்டம் இருக்கின்றது. அந்த சட்டத்தின் அடிப்படையில்தான், அனைத்தும் இப்போது பின்பற்றப்படுகிறது.

மாவட்டவாரியாக, கூட்டுறவு மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தின் மூலமாக அந்த தேர்வுகள் நடைபெறுவதற்கான அறிவிப்புகள் ஒளிவு மறைவின்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர் கூறியதாக சொன்னீர்கள், அவர் சொன்னதில், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 65 இலட்சம் பேர் பதிவு செய்து காத்திருக்கின்ற நேரத்தில், மூலமாக இந்த தேர்வை நடத்தாமல் ஏன் இப்படி நடத்துகிறீர்கள் என்று கேட்கிறார். 65 இலட்சம், 70 இலட்சம் பேர் பதிவு செய்திருந்தாலும்கூட அவர்களும் இந்த தேர்வுகளில் கலந்து கொள்ளலாம். இன்னும் அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாதவர்களும் இதில் கலந்து கொள்ளலாம் என்பது கூடுதல் சிறப்பு என்பதை அவர் புரியாமல் சொல்லியிருக்கிறார்.

**தக்காளி விலை கட்டுக்குள் வந்தது!**

**கேள்வி :** வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தது காத்திருப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம் என்பது பற்றி...

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** மீண்டும் சொல்கிறேன். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பவர்களும் இந்த தேர்வுகளில் கலந்து கொள்ளலாம். எந்தவிதமான தடை யும் இல்லை. பதிவு செய்யாதவர்களும் கலந்து கொள்ளலாம். எல்லோருக்குமான வாய்ப்புகளும் வழங்கப்படுகிறது.

**வெங்காய விளைச்சல் குறைவு!**

**கேள்வி:** 2005லிருந்து பசுமைக் கடைகளில் விற்பனை செய்து கொண்டு வருகிறீர்கள். இதுவரைக்கும் எவ்வளவு விற்பனை செய்திருக்கிறோம். அது பற்றி...

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் :** தேவைக்கேற்ப நாம் வாங்கினோம். கொடுத்தோம். மத்திய தொகுப்பிலிருந்து வந்தது. உள்ளூர் சந்தையிலிந்து கொள்முதல் செய்து ஓரளவு அந்த விலையை கட்டுப்படுத்துவதற்கு அது உதவியாக இருந்தது. அதேநேரத்தில் தக்காளி விலையை அரசு எடுத்த நடவடிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேசிய அளவில் தக்காளியின் விலை உயர்வு இருந்தாலும் கூட, வேறு எந்த மாநிலத்திலும், எந்த அரசும், எந்த முதலமைச்சரும் எடுக்காத நடவடிக்கைளை தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பு கவனம் செலுத்தி அதை எடுத்ததின் காரணமாக, ஓரளவு தக்காளி விலை கட்டுக்குள் வந்தது.

வெங்காய விலை சம்பந்தமாக கூட்டுறவுத் துறை ஆணையருக்கு அரசு மூலமாக ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி முக்கியமான வர்த்தகர்களை (big traders) வரவழைத்து எழலகத்தில் கடந்த வாரம் ஒரு கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. ஒரு மேல்முறையீடும் (appeal) கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல தேசிய அளவில் சராசரியாக இருக்க வேண்டிய விலையைவிட சற்று அதிகமாக வெங்கயத்தின் விலை இருக்கிறது என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒத்துழைப்பு கொடுப்போம் என்று உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். வெங்காயம் பசுமைக் கடை, அமுதம் சிறப்பங்காடி மற்றும் mobile shop போன்ற கடைகளில் ஒரு சோதனை அடிப்படையில் மேற்கொண்டு, சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கிடைக்கின்ற வகையில் செய்தால் விலை சற்றேகுறைந்து நிலைப்படுத்தமுடியும் என்ற நோக்கத்தில் செய்து வருகிறோம். தற்போது அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனால், சற்று அதனுடைய தாக்கம் தெரிகின்றது. முக்கியமாக, குறைவான பொருளாதாரத்தில் உள்ள பொது மக்கள் மற்றும் சேரி பகுதிகளில் இருக்கின்ற இடத்தில் கடைகளை அமைத்து முகாம்கள் நடத்தப்பட்டும் வருகிறது. இந்த மாத இறுதிவரை தொடர்ந்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்பிறகு தகுந்த முடிவெடுக்கப்படும்.

**கேள்வி :** எப்போதும் மழைக்காலத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிரந்தரமாக சேமிப்பு கிடங்கு ஒன்று வைப்பதற்கு ஏதாவது தீர்வு கிடைக்குமா?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** மகாராஷ்டிராவில் உள்ள நாசிக் போன்ற இடத்தில்தான் முக்கியமாக பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. சிறிய வெங்காயம் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. அதனால் தான் அந்த விலையின் குறியீடு வேறுபாடாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தேசிய அளவில் விளைச்சல் குறைவாக இருப்பதால் இந்த குறைபாடு ஏறக்குறைய ஏற்படுகிறது என்ற தகவலும் வருகிறது.

**கேள்வி :** இணைய வழி மூலமாக 5 கிலோ 100 ரூபாய் என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு இருப்பு இருக்கிறது. ஆனால் நாம் கொள்முதல் செய்வதில் பற்றாக்குறை ஏற்படுகிறது, அதற்கான திட்டங்கள் இருக்கிறதா?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** நீங்கள் சொன்னதுபோல, 5 கிலோவிற்கு 100 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் அதை எல்லோரும் வாங்கிக் கொள்ள வேண்டியதுதானே. பொது மக்களுக்கும் அவைகள் சென்று தானே சேருகிறது. ஆதலால், தெரிந்தவர்கள் அதை வாங்கிக் கொண்டால், தெரியாதவர்கள் கடைகளுக்கு சென்று வாங்கும்போது விலை சற்று குறைவாக கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இன்னும் கூடுதலான கவனம் செலுத்தி, அதை திருத்தி சீரமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, 3 மாதத்திற்குள் நிச்சயமாக ஒரு நல்ல முன்னேற்றத்திற்கு வரும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.



குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், குறிஞ்சிப்பாடி மகளிர் திட்டத்தின் சார்பாக தையல்குணம்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனாக ரூபாய் 98 லட்சமும் ,மேலபுதுப்பேட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூபாய் 98 லட்சமும், பூதம்பாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூபாய் 50 லட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 2 கோடியே 46 லட்சம் வங்கி பெருங்கடனாக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய செயலாளர் வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.நாராயணசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவஞான சுந்தரம் ராமச்சந்திரன், வட்டார இயக்க மேலாளர் சத்தியநாதன், வாழ்ந்து காட்டும் திட்ட வட்டார செயல் அலுவலர் மணிமாறன், வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், வடலூர் நகர கழக செயலாளர் தமிழ்ச்செல்வன், குறிஞ்சிப்பாடி பேரூராட்சித் தலைவர் கோகிலாகுமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராமர், குறிஞ்சிப்பாடி பேரூர் கழக செயலாளர் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., செ .இராமலிங்கம் எம்.பி., எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் ஆய்வு!

## அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பார்வையிட்டு நிவாரண பணிகளை துரிதப்படுத்தினார்!

நாகை, நவ.18 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் சீர்காழி ஒன்றியத்தில் கடந்த 15ம் தே தி யும் 16ம் தேதிகொள்ளிடம் ஒன்றியம் மாதானம், நல்லூர் ஆகிய கிராமத்தில்; மழைநீரில் சூழ்ந்துள்ள சம்பா சாகுபடி பயிர்களை சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் வட்டாரத்திற்குட்பட்ட நல்லூர் கிராமத்தில்; மழைநீரில் சூழ்ந்துள்ள சம்பா சாகுபடி பயிர்களை சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். ஆய்வுகளின்போது மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சித்தலைவர் .ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் .செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் .எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

ஆய்வுக்குப் பின் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் மயிலாடுதுறை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் மூன்று நாட்களாக பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உடனடியாக செல்ல வேண்டும் என எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை 2 நாள் பார்வையிட்டோம். மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மொத்தம் 16 செ.மீ மழை பதிவாகி உள்ளது. குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பகுதியில் 1088 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிரானது மழைநீரால் சூழ்ந்துள்ளது. அதேபோல கொள்ளிடம் பகுதியில் 1200 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிரானது மழைநீரால் சூழ்ந்துள்ளது. செம்பனார்கோ யில் பகுதியில் சுமார் 600 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிரானது மழையநீரால் சூழ்ந்துள்ளது. ஆக மொத்தம் சுமார் 3000 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிரானது மழை நீரால் சூழ்ந்துள்ளது. தற்போது மழை நின்றுவிட்டதால் தண்ணீரானது வடிய தொடங்கி இருக்கிறது. இந்த கனமழைக்கு 39 கால்நடைகள் உயிரிழந்து உள்ளன. அதேபோல் கூரை வீடுகள், ஓட்டு வீடுகள் என 150 வீடுகள் கனமழையினால் சேதமடைந்துள்ளது. இவை அனைத்திற்கும் மாவட்ட ஆட்சியர் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அதற்குறிய நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்வார்.

நேற்று சீர்காழி வட்டம், காத்திருப்பு ஊராட்சியில் உயிரிழந்த கனகராஜ் என்ற விவசாயியின் குடும்பத்திற்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை உடனடியாக வழங்கியுள்ளோம். மேலும் பொதுமக்கள், மழையினால் பாதிப்பு குறித்து உடனடியாக தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலகத்தில் செயல்பட்டுவரும் கட்டுப்பாட்டு அறைக்கு கட்டணமில்லா தொலைபேசி எண்கள் தெரியப்படுத்தவேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் வடகிழக்கு பருவமழையில் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மீட்டெடுக்க மாவட்ட ஆட்சியர், வருவாய்த்துறையினர், தீயணைப்புத்துறையினர், பேரிடர் மீட்புக் குழுவினர் ஆகியோர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர். விவசாயிகளின் கோரிக்கையான உப்பனாறு ஆழப்படுத்த வேண்டும், வடிகால் சரி செய்ய வேண்டும், பழைய கதவணைகளை எடுத்து விட்டு புதிய கதணைகள் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். இக்கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக சரிசெய்யப்படும்.

விவசாயிகளின் பயிர் காப்பீடு திட்டத்தில் கடந்த ஆண்டு ரூ.34 கோடி காப்பீடு நிறுவனத்திலிருந்து பெற்றுத் தந்துள்ளோம். அதே போன்று இந்தாண்டு கணக்கீடு செய்து வழங்கப்படும். இந்தாண்டு பயிர் காப்பீடு செய்ய சுமார் 68 ஆயிரம் ஹெக்டேருக்கு சுமார் 52 ஆயிரம் ஹெக்டேருக்குத்தான பயிர் காப்பீடு விவசாயிகள் செய்துள்ளனர். பயிர் காப்பீடு செய்ய இந்த மாதம் 22 ந்தேதி வரை நீட்டித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெற்றுத்தந்துள்ளார்கள். எனவே விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயிகள் பாதிக்காத வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்பட்டுவருகிறது என சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். ஆய்வின்போது கொள்ளிடம் மேற்கு ஒன்றிய செயலாளர் செல்ல சேது. ரவிக்குமார் கொள்ளி டம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ், மாவட்ட வருவாய் அலுவலர் மணி மேகலை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகளின் திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், வே ள ா ண் மை த் து றை இணை இயக்குநர் சேகர், நீர்வளத்துறை செயற்பொறியாளர் வே.சண்முகம், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா, மற்றும்மாவட்டம் மாநில கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் சார் பணிகளின் நிர்வாகிகள், ‘அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (16.11.2023) திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கி.கார்த்திகேயன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, அறங்காவலர் குழுத்தலைவர் இரா.ஜீவானந்தம், இணை ஆணையர்கள் அர.சுதர்சன், திருமதி.சி.ஜோதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்டம் – பொள்ளாச்சி காந்தி நிலை அருகில் தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வீ.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் பேரணியில் வந்தவர்களை வரவேற்றார். மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி சிறப்புரை ஆற்றிட, மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், கோவை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியம், பொருளாளர் பிரகாஷ் மற்றும் பொள்ளாச்சி நகரக் கழகச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் திருமலை ராஜா, மணிமாறன் தென்றல், வீ.ஆர்.நிஷாந்த் ஆகியோர் முன்னிலை வகித்திட இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் 2023ஆம் ஆண்டு கந்த சஷ்டி திருவிழா 13.11.2023 முதல் நடைபெற்றுவருவதைத்தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் சார்பில், பல்வேறு பகுதிகளிலிருந்து சாமிதரிசனம் செய்வதற்காக வருகைதரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் வகையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, ஆகியோர் நேற்று (16.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். அருகில் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், திருச்செந்தூர் நகர்மன்றத் தலைவர் திருமதி. சிவ ஆனந்தி, திருச்செந்தூர் நகர்மன்ற துணைத் தலைவர் ஏ.பி.ரமேஷ், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் குருச்சந்திரன், மண்டல இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) அன்புமணி, திருச்செந்தூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் வசந்தராஜ், இணை ஆணையர் (திருச்செந்தூர் திருக்கோவில்) கார்த்திக், திருச்செந்தூர் வட்டாட்சியர் வாமனன் ஆகியோர் உள்ளனர்.



முன்னாள் அரசு கொறடா, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன் அவர்களின் 27ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மேலக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற மாபெரும் இரத்த தான முகாமை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் பெரியண்ணன் அரசு, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு.வீரமணி, க.மதியழகன், ஆ.செந்தில், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, வே.பொன் துரை, மகேஸ்வரி சண்முகநாதன் , மணிமொழி மனோகரன், வடவாளம் க.செ.மணிமாறன், ராஜா பெரியண்ணன், ஆசிரியர் எம்.ரமேஷ் , ரமேஷ் மற்றும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் பலரும் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் –

# பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய பயனாளிகளுக்கு பணம் எடுக்கும் அட்டைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், நவ. 18 -

பெரம்பலூர் மாவட்டம். முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1000 வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தி ட்டத்தின் மூலம் பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார்!

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன் கா.சொ.க. கண்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்னம் சி. இராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1000 வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் தனலட்சுமி சீனிவாசன் பல் கலைக்கழக கல்லூரி கூட்ட அரங்கில் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம். சி. இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.சியாமளா தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

“மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் இன்று இருந்திருந்தால் “மங்கையராய் தமிழ் நாட்டில் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றே சொல்யிருப்பார். அந்த அளவிற்கு பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

அதனடிப்படையில், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ,1000 உரிமைத் தொகை வழங்கிடும் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை” தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதனை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ. லலிதா, வருவாய் கோட்டாட்சியர் (பொ) சத்திய பால கங்காதரன், தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் நீல்ராஜ், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் மீனா அண்ணாத்துரை

(பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), மாவட்ட ஊராட்சிக் குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், பேரூராட்சி தலைவர்கள் ஏ.எஸ்.ஜாகீர்உசேன் (லெப்பைக்குடிக்காடு), சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), பாக்கியலட்சுமிசெங்குட்டுவன் (பூலாம்பாடி), வள்ளியம்மை ரவிச்சந்திரன் (அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி, மகாதேவி ஜெயபால்,

நகர்மன்றத் துணைத்தலைவர் து.ஹரிபாஸ்கர் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அதானியின் பாக்கெட்டுகளில்

# பணத்தை நிரப்புகிறது பா.ஜ.க. அரசு!

## ராஜஸ்தான் தேர்தல் பிரச்சாரத்தில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

ஜெய்ப்பூர், நவ.18-

பாஜக அதானியின் பாக்கெட்டுகளுக்கு பணத்தை மாற்றுகிறது என காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.



ராஜஸ்தானில் சுரு பகுதியில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய ராகுல் காந்தி, ‘நாட்டில் கறுப்புப் பணம் ஒழிக்கப்படவில்லை என்றால் என்னை தூக்கிலிடுங்கள் என்று பிரதமர் மோடி கூறினார். கரோனா காலத்தில் ஆக்சிஜன், மருந்துகள் இல்லாமல் ஒருபக்கம் மக்கள் செத்துக்கொண்டிருக்கும்போது, மொபைல் போனில் டார்ச் விளக்கை எரிய விடும்படியும் பாத்திரங்களை தட்டும்படியும் கூறினார்.

ஆனால் ராஜஸ்தானில் காங்கிரஸ் அரசு மக்களுக்குத் தேவையான உணவு, மருந்துகளை வழங்கி வந்தது. இதனால் நோயாளிகள் மீண்டு வந்தனர். ஏனெனில் காங்கிரஸ் அரசு ஏழைகளுக்கான அரசு. ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்களுக்காக நாங்கள் ஆட்சி நடத்துகிறோம். நாங்கள் ஏழைகளை பாதுகாக்கிறோம். ஆனால் அவர்கள்(பாஜக) ஜிஎஸ்டியை கொண்டு வந்து முதல்முறையாக விவசாயிகளை வரி கட்ட வைத்தார்கள். பணமதிப்பிழப்பு நடவடிக்கையை கொண்டு வந்து சிறு வியாபாரிகளை முடக்கினார்கள்.

காங்கிரஸின் பணி என்பது ஏழைகளின் பைகளில் பணத்தை நிரப்புவது. ஆனால் அவர்கள் அதானியின் பைகளில் பணத்தை நிரப்புகிறார்கள். அதானியின் வணிகத்துக்கு உதவுகிறார்கள். அவர் மேலும் மேலும் பணம் சம்பாதிக்கவும் அந்த பணத்தை அவர் வெளிநாடுகளில் முதலீடு செய்யவும் உதவுகிறார்கள்’ என்று பேசினார்.

மேலும் ராஜஸ்தானில் காங்கிரஸ் தலைவர்கள் ஒற்றுமையுடன் இருப்பதாகவும் வரும் தேர்தலிலும் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைப் பிடித்து பாஜகவை துடைத்தெறியும் என்றும் தெரிவித்தார்.

ராஜஸ்தானில் வருகிற நவம்பர் 25 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# கழக இளைஞர் அணி கூட்டப் பந்தல் அமைக்கும் பணிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி ஆய்வு!

நாமக்கல், நவ. 18 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் பொம்மகுட்டைமேட்டில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்துக்கான பந்தல் மற்றும் மேடை அமைக்கும் பணியை பார்வையிட்டார். அதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தி.மு.க. இளைஞரணி மாநில செயலாளரும், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வரும் 21 ஆம் தேதி நாமக்கல் வருகிறார். அன்று பகல் 12 மணிக்கு அவருக்கு மாவட்ட எல்லையில் வெண்ணந்தூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து போதமலைப் பகுதி மக்கள் தங்களது பாரம்பரிய முறைப்படி அவரை வரவேற்கிறார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இதுவரை சாலை வசதி இல்லாத போதமலை கிராமங்களுக்குச் செல்ல சாலை வசதி அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு போதமலை மக்கள் நன்றி தெரிவிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிகளை தொடர்ந்து மதியம் 3 மணிக்கு நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வருகிறார்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் தான் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் கட்டிடங்கள் முறையாக கட்டப்பட்டு திறக்கப்பட்டது. பின்னர் மருத்துவ கவுன்சிலின் அனுமதியை பெற்று மாணவ, மாணவியர் சேர்க்கை துவங்கியது. அதே போல மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் குடிதண்ணீர் வசதி இல்லாததால் இதுவரை செயல்பாட்டிற்கு வரவில்லை. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் இது குறித்து, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசி ரூ.7 கோடியில் புதிய குடிநீர் திட்டத்தை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்காக கொண்டு வந்துள்ளார். தற்போது அந்த பணிகள் முடிவடைந்து விட்டது.

அதைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 21 ஆம் தேதி மாலை 3 மணிக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்து முதலில் வரும் உள்நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கான பதிவினை தொடங்கி வைக்கிறார்.

அதைத்தொடர்ந்து மாலை 4 மணிக்கு பொம்மைகுட்டைமேட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட பந்தலில், நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வரும் டிசம்பர் 17 ஆம் தேதி சேலத்தில் நடைபெறும் மாநாடு குறித்து பேசுகிறார். கூட்டத்தில், கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட சார்பில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. இராமசுவாமி, மாவட்டத் துணைச் செயலாளர் நலங்கிள்ளி, பொருளாளர் பாலச்சந்திரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் காளியப்பன், சுசிதரன், பூவராகவன், குணசேகரன்,

நகர கழக செயலாளர்கள் என்.ஆர்.சங்கர் ராணா ஆனந்த், எஸ்.பூபதி, அ.சிவக்குமார்,

ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் எம்.பி.கௌதம், கே.பி.ஜெகநாதன், நவலடி, பாலசுப்பிரமணியன், துரைசாமி செந்தில் முருகன், பழனிவேல், ஜெயபிரகாஷ்,

பேரூர் கழக செயலாளர்கள் சுப்பிரமணியன், நல்லதம்பி கண்ணன், ராஜேஷ், செல்லவேல் (எ) செல்லப்பன், ஜெயக்குமார், செல்வராஜ், அன்பழகன், புதுச்சத்திரம் ஒன்றிய குழு துணை தலைவர் ராம்குமார், வழக்கறிஞர் அணி ஆனந்த் பாபு,பழனியாண்டி, தனபால், முருகேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விஸ்வநாத், பொறியாளர் அணி அமைப்பாளர் கிருபாகரன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சித்தார்த், மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன், தகவல் தொழில்நுட்ப அணி சர்தார் ஜான், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், கலைவாணன், பிரபாகரன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமை! பொன். கௌதம சிகாமணி முன்னிலை!

# விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் க.பொன்முடி - பா.அப்துல்மாலிக் சிறப்புரை! செ.தினகரன் அறிவிப்பு!

விழுப்புரம், நவ. 18-

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி முன்னிலையில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் பா. அப்துல் மாலிக் ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி முன்னிலையில் இன்று (18.11.2023 - சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் நடைபெறுகிறது. உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் பா. அப்துல் மாலிக் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். அன்பு, டி.டி.ஜெ. ராஜவேல், எஸ்.பாலாஜி, பா. கலைவாணன், ஏ.சி.கே. பிரேம், ஏ.கே.தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் தெரிவித்துள்ளார்.

பொருள்: நவம்பர் 27 கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா. தி.மு.க. சேலம் மாநில இளைஞரணி மாநாடு. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் வருகை, நீட் கையெழுத்து இயக்கம்.

# தலைமைக் கழகம் அறிவிப்பு!

வருகிற 18.11.2023 அன்று சென்னையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவிக்காத நிலையில், கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது என வெளியான செய்தி தவறான செய்தியாகும்.

**“அண்ணா அறிவாலயம்”**
*சென்னை18.*
*நாள் - 16.11.2023*

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற மற்றும் உள்நோயாளிகளுக்கு போதுமான மருத்துவ உபகரணங்கள் உள்ளதா என்றும் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆய்வு செய்தார். உடன் திட்டக்குடி நகர மன்ற துணைத் தலைவர், நகர கழக செயலாளர் வி. பி.பி.பரமகுரு மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம் ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சி, எட்டிமடைபுதூர் மற்றும் கொல்லப்பட்டி ஆகிய பகுதிகளில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் 2 நகர்ப்புற துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணிகளுக்கான துவக்க விழா நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகரக் கழகச் செயலாளர் தா.கார்த்திகேயன், நகர மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (16.11.2023) நடைபெற்ற தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பாக செயல்பட்ட ஓட்டல் மேலாளர்களுக்கு பரிசுத்தொகை காசோலைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் உடன் உள்ளனர்.

### முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வுக் கூட்டத்தில் பேச்சு!

சென்னை, நவ.18-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா பயணிகளுக்கு குறைந்த செலவில் தங்கும் வசதி, விரும்தோம்பல், சாகச படகு பயணம், சுற்றுலா பேருந்து பயணம் உள்ளிட்ட சேவைகளை வழங்கி வருகின்றது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா ஆகியோர் முன்னிலையில் நேற்று (16.11.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சிறப்பாக செயல்பட்ட ஓட்டல் மேலாளர்களுக்கு பரிசுத்தொகை காசோலைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971-ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். சுற்றுலா கொள்கை 2023 வெளியிட்டு, சுற்றுலாத்துறை முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், படகு சவாரி மேற்கொள்ள படகு குழாம்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலர்களும், பணியாளர்களும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்களுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி அவர்களுடைய முதலாவது விருப்பமான தேர்வாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்களை உருவாக்கும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி. இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை கவுண்டம்பாளையத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கைத்தறி விற்பனை - வர்த்தக கண்காட்சி!

## நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் - மேற்கு மண்டல நெசவாளர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

கோவை, நவ. 18 -

தி.மு.கழக நெசவாளர் அணி - மேற்கு மண்டலத்திற்குட்பட்ட திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, கோவை தெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தி, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, தலைவர், துணைத்தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 15.11.2023 புதன்கிழமை அன்று திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந் துள்ள தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமையில் துணைச் செயலாளர் எஸ்.எல்.டி. சச்சிதானந்தம் வரவேற்புரையில் துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், செயலாளர்கள் க.பழனிசாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை சா.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், துணை செயலாளர்கள் வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், சி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கே.எம்.நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்ம நாபன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கோவை கவுண்டன்பாளையத்தில் 20.11.2023 அன்று கைத்தறி விற்பனை மற்றும் வர்த்தக கண்காட்சியினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக கொண்டாடுவது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தின் இறுதியில் திருப்பூர் தெற்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றியுரையாற்றினார்.



திருவாரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 16 வது நினைவு தின அமைதி ஊர்வலத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., சு.கல்யாணசுந்தரம் எம்.பி., தாட்கோ தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ந.இளையராஜா, மாநில மாணவரணி துணைச் செயலாளர் மன்னை.த. சோழராஜன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன் மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நவல்பட்டு அண்ணா நகர் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் மற்றும் கூடுதல் மின்பளு காரணமாக புதிதாக மூன்று மின்மாற்றிகளை அமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அர்ப்பணித்தார். 500'க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வர்த்தகர்கள் பயன்பெறும் வகையில் ரூ.19.52 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர் கங்காதரன், சண்முகம், நவல்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் ஜேம்ஸ் மற்றும் மின்வாரிய அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயிலில் - புதுப்பிக்கப்பட்ட தங்க ரதம்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தனர்!

செஞ்சி நவ 18-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலில் புதுப்பிக்கப்பட்ட தங்க ரதம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு புதுப்பிக்கப்பட்ட தங்க ரதத்தினை தொடங்கி வைத்தனர்.

தொடர்ந்து தங்க ரதத்தினை அமைச்சர்கள் பி.கே சேகர்பாபு, செஞ்சி மஸ்தான் ஆகியோர் கோவிலை சுற்றி இழுத்து வந்துசாமி தரிசனம் செய்தனர்.

முன்னதாக திருக் கோவிலுக்கு வருகை தந்த அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, செஞ்சி மஸ்தான் ஆகியோருக்கு திருக்கோவின் சார்பாக பூரண கும்பம் மரியாதை வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மூலவர் அங்காளம்மன், பெரியாழி அம்மனை தரிசனம் செய்த அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு செஞ்சி மஸ்தான் ஆகியோர் திருக்கோவிலில் பக்தர்களுக்குசெய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளையும்,அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பி.கே.சேகர்பாபு விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலில்புதியதாக தங்கத்தேர் செய்யப்பட்டு கடந்த 10.12.2010 அன்று தங்கத்தேர் வெள்ளோட்டம் நடத்தப்பட்டது. இந்நிலையில் மேற்படி தங்கத்தேரில் பழுது ஏற்பட்டு 06.12.2019 அன்று முதல் தங்கத்தேர் நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் தற்போது அனைத்து மராமத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு தங்கத்தேர் வெள்ளோட்டம் மீண்டும் இத்திருக்கோவிலில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில் 68 தங்கரதங்கள் உள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்றபின் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க பெரியபாளையம் திருக்கோவிலில் ரூ.8.0 கோடி மதிப்பீட்டிலும், புரசைவாக்கம் நங்கநல்லூர் ஆகிய திருக்கோவில்களில் தலா ரூ.6.0 கோடி மதிப்பீட்டில் தங்கத்தேர் என மொத்தம் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் 3 புதிய தங்கத்தேர்கள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் தற்போது தமிழ்நாட்டில் திருக்கோவில்களில் 57 வெள்ளிரதங்கள் உள்ளன.

பக்தர்களின் விருப்பத்திற்கிணங்கää இருக்கன்குடி திருக்கோவி லில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும், காளிகாம்பாள் திருக்கோவிலில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும், திருத்தனி முருகன் திருக்கோவிலில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டிலும்,திருக்காவூர் திருக்கோவிலில் ரூ.3.0 கோடி மதிப்பீட்டிலும், நெல்லையப்பர் திருக்கோவிலில் ரூ.4.0 கோடி மதிப்பீட்டில் என மொத்தம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் 5 புதிய வெள்ளி ரதங்கள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும்71திருக்கோவில்களில் ரூ.41.53 கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேரும் 41 திருக்கோவில்களில் ரூ.7.83 கோடி மதிப்பீட்டில் தேர்மராமத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

மரத்தேரோட்டத்தில் வரலாற்று சாதனைகளாக விழுப்புரம் மாவட்டம்பூவரசங்குப்பம் லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் 150 ஆண்டுகளுக்கு பின் தேரோட்டமும், சென்னை சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு ஆதி கேசவ பெருமாள் மற்றும் அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் திருக்கோவிலில் 87 ஆண்டுகளுக்கு பின் தேரோட்டமும், காஞ்சிபுரம் மாவட்டம் சீட்டனஞ்சேரி அருள்மிருகு காளீஸ்வரர் திருக்கோவிலில் 80 ஆண்டுகளுக்கு பின் தேரோட்டமும், கடலூர் மாவட்டம் திருக்கண்டீஸ்வரர் நடன பாதேஸ்வரர் திருக்கோவிலில் 72 ஆண்டுகளுக்குப் பின் தேரோட்டமும் 50 ஆண்டுகளுக்குப் பின் 2 திருக்கோவில்களிலும்40 ஆண்டுகளுக்குப் பின் 2 திருக்கோவில்களிலும் 30 ஆண்டுகளுக்குப் பின் 2 திருக்கோவில்களிலும் தேரோட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக பழுதடைந்த தங்கத்தேர் சரி செய்யப்பட்டதன் பேரில் இராமேஸ்வரத்தில் 11 ஆண்டுகளுக்குப்பின் 31.10.2022 அன்று தங்கத்தேர் உலாவும் சமயபுரத்தில்10 ஆண்டுகளுக்குப் பின் 15.12.2021 அன்று தங்கத்தேர் உலாவும் சேலத்தில் 09 ஆண்டுகளுக்குப்பின் 27.10.2023 அன்று அருள்மிகு கோட்டைமாரியம்மன் கோவிலில் தங்கத்தேர் உலாவும் திருத்தனியில் 05 ஆண்டுகளுக்குப் பிறகு 14.12.2021 அன்று தங்கத்தேர் உலாவும் வடபழனியில் 02 ஆண்டுகளுக்குப் பின் 20.11.2022 அன்று தங்கத்தேர் உலாவும் திருச்செந்தூ ரில் 02 ஆண்டுகளுக்குப் பின் அன்று தங்கத்தேர் உலாவும் திருத்தனியில் 10 ஆண்டுகளுக்குப் பின் 04.09.2023 அன்று வெள்ளித்தேர் உலா மீண்டும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை மற்றும் அறிவுறுத்தலின்படி 07.05.2021 முதல் 16.11.2023 வரை 1153 திருக்கோவில்களில் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் ரூ.5508 கோடி மதிப்பீட்டிலான 5917 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி பிடிக்க நினைப்பது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போன்றது தமிழகம் திராவிட நாடு 25 ஆண்டுகளுக்கு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நீடிக்கும். தமிழகத்தில் பி.ஜே.பி.யின் ஆட்சிக்கணவு கானல் நீருக்கு சமமானது என உறுதிபட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் முரளிதரன், கூடுதல் ஆணையர் ஹரிப்பிரியா, இணை ஆணையர் சிவக்குமார், துணை ஆணையர் சிவலிங்கம், உதவி ஆணையர் மேல்மலையனூர் ஜீவானந்தம், ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட அறங்காவல் குழு இயக்குநர் செல்வராஜ், துணைச் சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பரமணி, செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர் யோசோதரை சந்திரகுப்தன், ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், அறங்காவலர்கள் தேவராஜ், ,ராமலிங்கம், செல்வம், சரவணன்வடிவேல், சந்தானம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் கூட்டம், நாளை (19.11.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில், காணொலி காட்சி வாயிலாக, எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. நவம்பர் 27 'எளியோர் எழுச்சி நாள்' கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்;

2. மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து

**'அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள்: 16.11.2023.

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.



நாமக்கல் மாவட்டத்தில் வரும் 21 ஆம் தேதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்து, பொம்மைகும்டைமேட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட பந்தலில், நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள உள்ளார். கூட்டம் நடைபெறும் இடத்தில் மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணியை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிடச் சித்தாந்தங்களையும் - பா.ஜ.க. வை எதிர்க்க வேண்டியதையும் -டிஜிட்டல் வழியே

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘தெற்கிலிருந்து ஒரு குரல்’ மூலம் வலியுறுத்துகிறார்!

**சென்னை, நவ. 18-**

**‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு நேற்று முன்தினம் (16.11.2023) வெளியிட்டுள்ள சிறப்புக் கட்டுரையில், திராவிடச் சித்தாந்தங்களையும் , பா.ஜ.க.வை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டிய அவசியத்தையும் டிஜிட்டல் வழியே ‘தெற்கிலிருந்து ஒரு குரல்’ மூலம் வலியுறுத்தி வருகிறார், தமிழ்நாடு முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று தெரிவித்துள்ளது.**

சமூக நீதிக் கொள்கைகளின் அடிப்படையில் விந்திய மலைக்கு அப்பால் உள்ள எதிர்க் கட்சிகளை பா.ஜ.க.வுக்கு எதிராக ஓரணியில் திரட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முயன்று வருவதாக ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

“விடா முயற்சி, டிஜிட்டல், திராவிடம்” என்ற தலைப்பில் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், அண்மைக்காலமாக “தெற்கிலிருந்து ஒரு குரல்” என்ற தலைப்பில், தனது அரசியல் கொள்கைகளை நாடு முழுவதும் எடுத்துச் செல்லும் நோக்கில், ஆடியோ பதிவுகளை வெளியிட்டு வருவதையும், “செக், செக், செக். ஒன், ட்டு, திரி , ஆரம்பிக்கலாமா? வணக்கம்,” எனக் குறிப்பிட்டு அவர் தனது பேச்சைத் தொடங்குவதையும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ சுட்டிக்காட்டி உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலியில், தொடர்ந்து உடன்பிறப்புக்களுக்கு கடிதம் எழுதி, தனது கட்சி ஊழியர்களுடன் பிரிக்க முடியாத தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார் இதனைப் போல், தனது கருத்துக்களை கொண்டு செல்ல முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டிஜிட்டல் வழியை தேர்வு செய்துள்ளார் என்று ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு தெரிவித்துள்ளது.

2024 மக்களவைத் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில், பாஜகவை எதிர்கொள்வதற்கான நாடு தழுவிய பிரச்சாரத்தை தொடங்குவது மட்டுமே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நோக்கமல்ல என்றும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்

## “தி டைம்ஸ் ஆப் இந்தியா” நாளேடு சிறப்புக் கட்டுரை!

கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட “திராவிட மாடல்” அரசியல் மூலம் சமூக நீதிக்கான - புதுயுக போராளியாக மாறி அடித்தளத்தை வளர்த்தெடுப்பதே அவரது நோக்கம் என்றும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை “திராவிட நாயகன்” என அழைப்பதற்கு காரணம், “திராவிட மாடல்” ஆட்சியின் சாதனைகளை நாடு முழுவதும் கொண்டு செல்வதற்காக அவர் மேற்கொண்டுள்ள முயற்சிகளால்தான் என அமைச்சரும், திமுக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளருமான டி.ஆர். பி.ராஜா விளக்கம் அளித்துள்ளார்.

திராவிடப் பெருமையை நாடறிய வேண்டும் என்கிற முயற்சியில் இந்தியாவிற்காக பேசும் ‘பாட்காஸ்ட்’ தொடரை அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்த்து, திராவிட ஆரிய வேறுபாடு குறித்து விளக்கப்படுகிறது. தி.மு.க. மீதான ‘தனி நாடு’ என்ற பிம்பத்தை மாற்றுவதே அதன் நோக்கம் என்றும் தி.மு.க.வினர் சிலர் தெரிவிக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் 4ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது PODCAST தொடரின் முதல் பதிவை “இந்தியா” கூட்டணிக்காக வெளியிட்டதையும், பா.ஜ.க. தனது தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை என்றும், அதன் தோல்விகளை மூடி மறைக்க பா.ஜ.க. மதத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவதாக அவர் குற்றம்சாட்டிதை யும் சுட்டிக்காட்டி உள்ள இக்கட்டுரை, முதலமைச்சரின் கருத்துக்களை நாடு முழுவதும் கொண்டு செல்வதற்காக தி.மு.க. தொழில்நுட்ப அணி சிறப்பான பணியாற்றி வருவதாக பாராட்டி உள்ளது.

தி.மு.க.வின் ஆதரவு அமைப்பான 100 க்கும் மேற்பட்ட சமூக வலைதளங்களிலும் ஓராண்டாக செயல்பட்டு வரும் PEN (POPULAR EMPOWERMENT NET WORK) அமைப்பும் இத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன.




இந்தித் திணிப்பை தி.மு.க. எதிர்ப்பதால், இந்தி பேசும் மக்களுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல என்பதை இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதும், அனைத்து மாநிலங்களுக்கும், மாநில சுயாட்சி வேண்டும் என்பதை வலியுறுத்துவதுமே தி.மு.க. வின் நோக்கம் என்றும் தனி நாடு அல்லது பிரிவினை என்பது தி. மு.க. வின் கொள்கை அல்ல என்பதை வலியுறுத்துவதும் எங்களின் முக்கிய நோக்கம் என்று PEN அமைப்பின் தலைவர் மணிகண்டன் வாசுதேவர் தெரிவிப்பதாகவும், ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ சுட்டிக் காட்டியுள்ளது.

“முதலமைச்சர் பல துறைகளில் திறமை உள்ளவர், கொள்கை அடிப்படையில் செயல்படக்கூடியவர், அவருக்காக எந்த புதிய தோற்றத்தையும் ஏற்படுத்த வேண்டிய தேவை இல்லை, அவர் பேசுவதே போதுமானது” எனவும், “இந்தியா முன்னேறினால் தமிழ்நாடு சிறப்பாக வளரும், வலிமையான இந்தியா தமிழ்நாட்டை மேலும் செழிப்படையச் செய்யும்” என்பதே தி.மு.க. தலைவரின் நிலைப்பாடு என்றும், திராவிடக் கொள்கைகளை நாடு முழுவதும் விரிவடையச் செய்வதும், பெண்களுக்கு சமஉரிமை, பெண் குழந்தைகளுக்கு சமவாய்ப்பு அளிக்கப்படுவதன் மூலம் சமூகநீதி வலுப்பெற வேண்டும் என்பதே முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் விருப்பம் என தி.மு.க. தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா கூறியதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

மாநில சுயாட்சியை பலப்படுத்தவும், நாட்டின் முன்னேற்றத்திற்காக பா.ஜ.க. தோற்கடிப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள குரல் பதிவுகளை 35 லட்சம் பேர் கேட்டுள்ளதாகவும் ’தி டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

பிரதமராகும் எண்ணம் ஒருபோதும் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு இல்லை என்றும், திராவிட மாடல் நாடு முழுவதும் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே அவரின் ஒரே குறிக்கோள் என்று அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.

‘பாட்காஸ்ட்’ மூலம் பேசுவது என்பது பல்வேறு டிஜிட்டல் முயற்சிகளின் விரிவாக்கம்தான். 2022-ஆம் ஆண்டு ஜனவரியில் தி.மு.க. தலைவர் அகில இந்திய சமூக நீதிக்கான கூட்டமைப்பினை உருவாக்கியபோது, இன்றைய ‘இந்தியா’ கூட்டணியில் அங்கம் வகிப்பவர்களே பெரும்பாலும் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

அதன் முதலாவது கூட்டத்தில் காணொலி மூலம் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசுகையில், பா.ஜ.க. வால் பட்டப்பகலில் சமூக நீதி கொல்லப்படுவதாக தெரிவித்தார்.

இந்தியாவிற்காகப் பேசும் உரைகள் நாளுக்கு நாள் அதிகம் பேர் கேட்டு வருவதாக ‘பென்’ அமைப்பு தெரிவிக்கிறது. இரண்டாம் அத்தியாயத்தில் மாநில சுயாட்சியை வலியுறுத்தியதையும், மூன்றாம் அத்தியாயத்தில் பா.ஜ.க.வை ஒட்டு மொத்த இந்தியாவில் தோற்கடித்தேயாக வேண்டும் எனக் குறிப்பிட்டதையும் அந்த அமைப்பு எடுத்துக்காட்டியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தக் குரலை ஒவ்வொருவரும் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சென்று இந்தியாவின் குரலாக ஒலிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதாக மணிகண்டன் வாசுதேவன் குறிப்பிட்டுள்ளதை ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ வெளியிட்டுள்ளது.

மு.க.ஸ்டாலின் அவர்ள் பேசி முடித்தவுடன் எங்கள் பணி தொடங்கிவிடும். இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் அந்த உரைகள் மாற்றப்பட்டுவிடும். யூ டியூப் மற்றும் டெலிகிராமில் நூற்றுக்கணக்கானவர்கள் எங்களை பின்பற்றி அவரது கருத்துக்களை பரப்புகின்றனர் என்று சாப்ட்வேர் பொறியாளர் விக்னேஷ் ஆனந்த் தெரிவிக்கிறார்.

‘ஸ்டாலின் பிராண்டு’ ஏற்படுத்துவதே எங்கள் விருப்பம். கடந்த மாதம் (2.10.2023) 2-ஆம் தேதி 2000 பேர் பங்கேற்ற கூட்டத்தில் ஸ்டாலின் அவர்கள் இரண்டரை மணி நேரம் கருத்துககைளப் பரிமாறிக் கொண்டார். தொலைக்காட்சி விவாதங்களுக்கான தலைப்புகளை தேர்வு செய்வதில் ஊடகம் முக்கிய பங்காற்றுகின்றன. அதை ஏற்படுத்த நாங்கள் முயற்சித்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.





சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (16.11.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்/மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருச்செந்தூர் கோவிலைத் தூய்மையாக வைத்துள்ள

# கோவில் நிர்வாகத்தைப் பாராட்ட வேண்டும்!

## மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி புகழாரம்!

மதுரை, நவ.18 -

“திருச்செந்தூர் கோவிலை தூய்மையாக வைத்துள்ள கோவில் நிர்வாகத்தைப் பாராட்ட வேண்டும்” என்று உயர்நீதிமன்ற நீதிபதி புகழேந்தி புகழாரம் சூட்டியுள்ளார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

திருச்செந்தூரைச் சேர்ந்த வீரபாகு மூர்த்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், முருகனின் அறுபடை வீடுகளில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் 2ஆம் படை வீடாக திகழ்கிறது. கோவிலுக்கு வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு தற்போது மகா மண்டபத்தில் பக்தர்கள் கொண்டு வரும் அர்ச்சனை தேங்காய் உடைக்கப்பட்டு வருகிறது. சன்னதியில் மயில் தேவர் சிலை முன்புறத்தில் பக்தர்களுக்கு விபூதி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வரிசையில் வரும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது.

விபூதி கொடுக்கும் இடமும் தேங்காய் உடைக்கும் இடமும் பாரம்பரிய முறைபடி ஏற்கனவே இருந்தபடி சன்னதிக்கு அருகே மாற்றம் செய்யப்பட்ட வேண்டும். ஆனால் விபூதி மற்றும் தேங்காய் உடைக்கும் இடத்தை கோயில் இணை ஆணையர் இட மாற்றம் செய்துள்ளார் இதனை ரத்து செய்யக் கோரி மனு செய்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதி புகழேந்தி முன் விசாரணைக்கு வந்தது. ஆண்டுதோறும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தாலும், திருச்செந்தூர் கோவிலை தூய்மையாக வைத்து உள்ளனர். அதற்கு கோவில் நிர்வாகத்தை பாராட்ட வேண்டும். மேலும் பக்தர்களுக்கு விபூதி கொடுப்பதில் கோவில் நடைமுறைகள், பக்தர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும்.

விபூதி கொடுக்கும் இடம் சன்னதியில் இருந்து கொஞ்சம் தூரம் தள்ளி கொடுத்தால் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த முடியும். எனவே இது குறித்து மனுதாரர் தரப்பில் எந்த இடம் என்பது குறித்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என கூறிய நீதிபதி, விரிவான வாதத்திற்காக நவம்பர் 24-ஆம் தேதி ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று முன்தினம் (16.11.2023) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயிலில் புதுப்பிக்கப்பட்ட தங்கத்தேரின் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் சிவக்குமார், அறங்காவலர் குழுத் தலைவர் சு.செந்தில் குமார், உதவி ஆணையர் திரு.இ.ஜீவானந்தம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் 21 ஆம் தேதி -

# பெருந்துறையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, நவ. 18-

ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நேற்று (17-11-2023) நடைபெறுவதாக இருந்த இந்நிகழ்ச்சி வருகிற 21 ஆம் தேதி அன்று நடைபெறுகிறது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக்கிறார் என ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழக செயலாளர்கள் சு.முத்து சாமி என்.நல்லசிவம் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:





ஈரோடு வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பெருந்துறை சரளையில் 17.11.2023 வெள்ளிக்கிழமை அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவிருந்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அரசு நிகழ்ச்சியும் ஒத்திவைக்கப்பட்டு, அந்நிகழ்ச்சிகள் பெருந்துறை சரளையில் 21.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று மாற்றம் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு நடைபெறும்

21.11.2023 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு காலை 10 மணிக்கு இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்

காலை 11 மணிக்கு பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அரசு நிகழ்ச்சி

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் , பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோடு வடக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர்கள் சு.முத்துசாமி, என்.நல்லசிவம் ஆகியோர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்கள்.



நாகை மாவட்டத்திற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழ்த்தேர் என்ற அலங்கார ஊர்தி வருகை தந்தது. நாகை அவுரித்திடலுக்கு வந்த முத்தமிழ்த்தேரில் உள்ள கலைஞர் சிலைக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம்வர்கீஸ், சட்ட மன்ற உறுப்பினர்கள் முகமதுஷாநவாஸ், நாகைமாலி, நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ஆர்.டி.ஏ.அண்ணாதுரை, நாகை நகர துணைச் செயலாளர் பி.திலகர் மற்றும் பலர் உள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# தமிழ்நாடு முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள்!

## அரசு திட்டம்!

கடலூர், நவ. 18-

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு (‘கலைஞர் 100”) விழாவை முன்னிட்டு 2023-2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 100 சிறப்பு மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 25.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை கடலூர், மஞ்சக்குப்பம் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், ஜவுளி, வங்கிசேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளைச் சார்ந்த பல முன்னனி வேலையளிக்கும் நிறுவனங்கள் தங்களின் காலிப்பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

நடைபெறவிருக்கும் இம்முகாமில் 8 ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு, பொறியியல், செவிலியர், ஆசிரியர், தொழிற்கல்வி போன்ற அனைத்து விதமான கல்வித்தகுதியினை உடையவர்களும் கலந்துகொண்டு பயன்பெறலாம். இச்சிறப்பு மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள வேலையளிக்கும் நிறுவனங்களும், வேலைநாடுநர்களும் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது. முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி (04142-290039), 9499055908, 9499055907 வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

எனவே கடலூர் மாவட்டத்தில் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் 25.11.2023 (சனிக்கிழமை) நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், தெரிவித்துள்ளார்கள்.



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் நல்லூர் கிராமத்தில் தற்பொழுது பெய்த கன மழைநீர் சூழ்ந்துள்ள சம்பா சாகுபடி நெல் பயிர்கள் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, கொள்ளிடம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செல்லசேது.ரவிக்குமார், கொள்ளிடம் ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ் மற்றும் பலர் உள்ளனர்.

### பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில்

# கடன்பெற சிறப்பு முகாம்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ 18-

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(TABCEDCO) மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனிநபர் கடன், சுயஉதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன், கைவினை கலைஞர்களுக்கு கடன் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி, திட்டத்தினை சிறுபான்மையினர் மக்கள் அறிந்து கடன் பெற்று வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் வகையில் கடன் விண்ணப்பங்கள் பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 22.11.2023 அன்றும், திருவட்டார் வட்டாட்சியர் அலுவலகத்தில் 23.11.2023 அன்றும், கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 24.11.2023 அன்றும், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.11.2023 அன்றும், தோவாளை வட்டாட்சியர் அலுவலகத்தில் 29.11.2023 அன்றும், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 30.11.2023 அன்றும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

மேற்படி சிறப்பு முகாம்களில் இத்திட்டத்தின் கீழ் கடன்பெற விண்ணப்பங்கள் அளிக்கலாம். மேற்படி, தனிநபர் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது சாதிச்சான்று, வருமானச் சான்று, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை நகல், தொழில் திட்ட அறிக்கை, கூட்டுறவு வங்கி புத்தக நகல் மற்றும் கல்வி கடனுக்கு விண்ணப்பிக் கும் போது பள்ளி மாற்று சான்றிதழ், உண்மை சான்றிதழ் (Bonafide) மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.





புதுச்சேரி மாநிலத்தில் இருந்து ஒரு லட்சம் கையெழுத்து என்ற இலக்கோடு மாநில தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணிகள் இணைந்து புதுச்சேரியில் நீட்டுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை தொடங்கினார்கள். லப்போர்த் வீதியில் உள்ள மாநில கழக அலுவலகத்தில் நடந்த துவக்க நிகழ்ச்சிக்கு மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.பி. மணிமாறன் முன்னிலை வகித்தார். கையெழுத்து இயக்கத்தை மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., ஏ.கே. குமார், சண்.குமரவேல், எஸ்.கோபால், வே. கார்த்திகேயன், வேலவன், சக்திவேல், பரிமளம், தாமோ தமிழரசன், காயத்ரி ஸ்ரீகாந்த், முகிலன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம் ,குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் வாண்டியாம்பள்ளம் ஊராட்சி கிளைக்கழக பிரதிநிதி G.பழனி அவர்களின் மறைவையொட்டி வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிவக்குமார், நாராயணசாமி, மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர செயலாளர் தமிழ்ச் செல்வன், மீனவர் அணி செல்வபாரதி, வாண்டியாம் பள்ளம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மணி மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வர வேண்டும்!

## தொழில் முனைவோருக்கு அழைப்பு!

கரூர், நவ. 18-

ஜவுளித்துறையில் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்த அரசு செயல்படுத்தி வரும் பல திட்டங்களுள் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்த பட்சம் 3 ஜவுளி உற்பத்தி தொழிற்கூடங்கள் அமைக்கப்படவேண்டும். தகுதி வாய்ந்த திட்ட மதிப்பீட்டில் ( பொது உள்கட்டமைப்பு வசதிகள் பொது பயன்பாட்டிற்கான கட்டிடங்கள்) 50 சதவீதம் அல்லது ரூ 2.50 கோடி இவற்றில் எது குறைவானதோ அது தமிழ்நாடு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது.

தற்போது தொழில்முனைவோரின் கோரிக்கையைத் தொடர்ந்து, தகுதி வாய்ந்த திட்ட மதிப்பீட்டில் ஜவுளி தொழிற்கூடங்கள் அமைப்பதற்கான கட்டிடங்களையும் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் அமைத்து நடுத்தர நிறுவனங்களின் மூலம் வளர்ச்சி ஏற்பட்டு வேலைவாய்ப்பு பெருகும். மேலும், அதிகளவில் அந்நிய செலாவணி ஈட்டுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். எனவே சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளை அனைத்து மாவட்டங்களிலும் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் வேலை வாய்ப்புகளை பெருக்கவும் அனைத்து தொழில் முனைவோரும் முன்வர வேண்டும் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புக்கு: மண்டல துணை இயக்குநர், துணிநூல்துறை, மண்டல துணை இயக்குநர் அலுவலகம், எண். 30/3, நவலடியான் வளாகம் முதல் தளம், தாந்தோணிமலை, கரூர்-639 005. தொலைபேசி எண் : 04324- 299 544,+91-9843212584

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. முகமது அலி
### நவம்பர் 18 (2013)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு வீட்டுவசதி அடமான வங்கி இயக்குநர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி தலைமையில் 70வது கூட்டுறவு வார விழா கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைத் தலைவர் ஷீலாஸதேவி சேரன், ஆவின் தலைவர் செ.தினகரன், நகர மன்றத் தலைவர் ச.தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.விசுவநாதன், கூட்டுறவுத் துறை அதிகாரி யசோதா தேவி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் பொதுபணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (16.11.2023) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கி.கார்த்திகேயன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, அறங்காவலர் குழுத்தலைவர் இரா.ஜீவானந்தம், இணை ஆணையர்கள் அர.சுதர்சன், திருமதி சி.ஜோதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### மலைக்குச் செல்லும் பாதையில்

# தீ விபத்துகள் ஏற்படாமல் பணியாற்ற வேண்டும்!

## தீபத் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

திருவண்ணாமலை, நவ.18-

“மலைக்குச் செல்லும் பாதையில் தீ விபத்துகள் ஏற்படாமல் காவல்துறையும், தீயணைப்புத்துறையும் பணியாற்ற வேண்டும்” என்று அருணாச்சலேசுவரர் திருக்கோவில் கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடுகள் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திரு விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நேற்று முன்தினம் (16.11.2023) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

ஊர் கூடி தேர் இழுத்தால் தான் அந்த திருத்தேர் நிலைக்கு வர முடியும். அதேபோல துறைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பணியாற்றுகின்றபோது அந்த பணி சிறப்பாக அமையும். அப்படி அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றிய காரணத்தினால் தான் திருவண்ணாமலையும், இந்த திருக்கோயிலும் பெருமை அடைகிறது. இந்த பெருமையை சேர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் பாராட்டுகளையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்தாண்டு தீபத்திருவிழாவை மிகச் சிறப்பாக நாம் நடத்தி இருந்தாலும் சில குறைகள் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் குறைகளையும் நாம் நிவர்த்தி செய்திட வேண்டும். கடந்தாண்டு தீபம் ஏற்றும் மலைக்கு சென்ற பக்தர்களுக்கு தண்ணீர் பாட்டில்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டதாகவும், போலி அனுமதி அட்டைகள் குறித்தும் செய்திகள் வந்தன. சமூக வலைதளங்களில் சிறு தவறுகளை கூட பெரிதாக பரப்புகின்றார்கள். மலைக்கு செல்லும் பாதையில் தீ விபத்துகள் ஏற்படாத வண்ணம் காவல்துறையும், வனத்துறையும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். இந்த முறை மாவட்ட நிர்வாகமும், இந்து சமய அறநிலையத்துறையும் இது போன்ற குறைபாடுகள் எழாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவல் உதவி மையங்களில் போதுமான காவலர்களை நியமித்திடவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை நகராட்சி நிர்வாகமும் உறுதிப்படுத்திட வேண்டும்.

**நடைபாதை கடைகள்!**

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி திருவண்ணாமலை கோயிலை சுற்றியுள்ள தேரோடும் வீதிகளை கான்கிரிட் சாலைகளாக அமைக்க நெடுஞ்சாலைத்துறையின் மூலம் அறிவிப்பு செய்து 1,000 மீட்டர் கான்கிரிட் சாலை அமைக்கப் பணிகளை தொடங்கினோம். இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த போதும் அதில் வெற்றி பெற்று சாலையை அமைத்து வருகிறோம். அமைக்கப்பட்ட கான்கிரிட் சாலையில் இன்றைய தினம் திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட பொறியாளர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை உயர் அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நோக்கத்திற்காக ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைத்து தருகின்றோம். மீண்டும் அந்த இடங்களில் நடைபாதை கடைகள் அமைக்கப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்திட வருவாய்த்துறையும், இந்து சமய அறநிலையத்துறையும் இணைந்து வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடும் வகையில் தற்காலிக கடைகள் அமைத்திட இடத்தை தேர்வு செய்து வழங்கிட வேண்டும். அதற்கு நெடுஞ்சாலைத்துறையும், காவல்துறையும் உதவிட வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்ட காவல்துறையின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள். திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு கர்நாடகா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களிலிலிருந்து அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருகிறார்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை தருகிறார்கள். ஆகவே, காவல்துறை குறைகள் ஏற்படாத வண்ணம் இன்னும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும்.

கார்த்திகைத் தீப முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டங்கள் 2006 ஆம் ஆண்டு திமுக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் தீபத் திருவிழாவிற்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கிறது. ஆனால் திருக்கோயில் உள்ளே அனுமதிக்கப்படும் இடமானது ஒரே அளவாக தான் உள்ளது. ஆகவே, மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும், இந்து சமய அறநிலையத்துறையும் ஒருங்கிணைந்து திருக்கோயிலுக்குள் எந்த அளவிற்கு பக்தர்களை அனுமதிக்க முடியுமோ அந்த அளவிற்கு மட்டுமே பக்தர்களையும், அவர்களின் பாதுகாப்பிற்கு தேவையான காவலர்களையும் அனுமதிக்க வேண்டும். குறைவான காவலர்களை கொண்டு சிறப்பான பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள காவல்துறை தங்கள் நுண்ணறிவை பயன்படுத்தி செயலாற்றிட வேண்டும்.

**குழுக்கள் அமைக்கப்படும்!**

திருவண்ணாமலையை சுற்றி கண்காணிப்பு கேமராக்கள் முழுமையாக பொருத்தப்பட்டுள்ளன. இதற்கு சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் நிதியை வழங்கியுள்ளனர். இந்த கண்காணிப்பு கேமராக்கள் நல்ல முறையில் செயல்படுகின்றதா என்பதனை உறுதி செய்வதோடு, தனியார் விடுதி களில் தங்கி இருப்பவர்களை கண்காணித்திடவும் காவல்துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையின் சார்பில் திருக்கோயில் உள்பிரகாரத்தில் தேவையான மருத் துவ குழுக்கள் அமைத்திட கவனம் செலுத்திட வேண்டும். அருணை மருத்துவ கல்லூரி சார்பிலும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்படும்.

கிரிவலப் பாதையை தூய்மையாக வைத்து கொள்ளவும், பேவர் பிளாக் பாதைகள் அமைக்க வேண்டிய இடங்களில் துரிதமாக அமைத்திடவும் நெடுஞ்சாலைத்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருத்தேர்கள் ஓடும் நாட்களில் தேவையான உபகரணங்களுடன் பொதுப்பணித்துறையினரும், மின்சாரத்துறையினர் எவ்வித அசம்பாவிதமும் ஏற்படா வண்ணம் கவனமுடன் பணியாற்றிட வேண்டும். நகராட்சி நிர்வாகம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதோடு கழிப்பிட வசதிகளையும், குப்பைகள் சேரா வண்ணம் தூய்மைப் பணிகளையும் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும்.

கிரிவலப் பாதையில் ஆசி வழங்குவதாக பலர் பக்தர்களிடம் பணம் வசூலிப்பதை கண்காணிக்கும் சாதாரண உடையில் காவலர்களை வலம்வர செய்திட மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் ஏற்பாடு செய்திட வேண்டும். திருக்கோயிலின் கட்டளைதாரர்கள் மற்றும் உபயதாரர்களுக்கும் தீபத்திருவிழா நிகழ்ச்சிகளை சேகரித்து ஒளிபரப்பும் ஊடகத்துறையை சேர்ந்த பத்திரிக்கையாளர்களை முறையாக கணக்கெடுத்து அவர்களுக்கும் உரிய அனுமதி சீட்டுகளை வழங்கிட வேண்டும்.

இந்தாண்டு கார்த்திகை தீபத்திருவிழா சிறப்பாக அமைந்தது என்று அனைவரும் பாராட்டும் அளவிற்கு அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகளும், பிற துறை அலுவலர்களும், உறுதுணையாய் இருந்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு பேச்சு!**

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசுகையில்,

கார்த்திகை தீபத்திருவிழாவை மிகச்சிறப்பாக நடத்திடும் வகையில் அனைத்து துறைகளும் மேற்கொள்ள வேண்டிய பணிகளை துல்லியமாகவும், தெளிவாகவும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார். ஆகவே, ஒருசில கருத்துக்களை மட்டும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இந்த திருவிழாவின்போது சிறப்புக்கள் பல இருந்தாலும் ஏதாவது ஒரு சிறிய தவறு நடந்துவிட்டால் அதைத் தான் மிகைப்படுத்தி பத்திரிக்கைகள் பெரிதாக்குகின்றன. கடந்த காலங்களில் நடைபெற்ற கார்த்திகை தீபத் திருவிழாக்களோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நடைபெறுகின்ற தீபத்திருவிழா வோடு ஒப்பிட்டு பார்த்தால், குறிப்பாக மாவட்ட அமைச்சர் மற்றும் அலுவலர் பெரு மக்கள் விழா சிறப்பாக நடைபெற ஆத்மார்த்த உணர்வோடு பணிகளை மேற்கொண்டு வருவதை தெளிவாக உணர முடியும்.

கடந்தாண்டு எங்கும் எந்த தவறும் நடந்து விடக்கூடாது என்பதற்காக உள்ளே அனுமதிக்கப்படுகின்ற கட்டளைதாரர்கள், உபயதாரர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் அனுமதி அட்டைகளை (பாஸ்களை) கட்டுப்பாடுகளுடன் முடிந்த அளவிற்கு குறைத்து பொதுமக்கள் சிறப்பாக தரிசனம் செய்வதற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ததை மனசாட்சியுள்ள யாரும் மறுக்க முடியாது. கடந்த முறை போன்றே அனைத்து வசதிகளையும், இந்தாண்டும் செய்து தந்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டு அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து செய்திட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளரே தற்போதும் பணியில் உள்ளதால் அவர்களது பணி அனுபவத்தால் இந்தாண்டும் தீபத்திருவிழா சிறப்பாக அமையும். மேலும், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் சிறப்பு அலுவலர்களாக பணியாற்ற பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆகவே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த கருத்துக்களை நானும் வழிமொழிந்து அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்போடு செய்து தருவோம். திருக்கார்த்திகை தீபத் திருவிழாவில் எங்கும் சிறிய அசம்பாவிதம் கூட நிகழாமல், எந்தத் தவறுக்கும் இடம் தராமல் பணியாற்றிட நம் அனைவரும் கூட்டுப் பொறுப்பு உண்டு என்பதை மனதில் நிறுத்தி இந்த தீபத் திருவிழாவை ஒளிபெறச் செய்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ. முரளீதரன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கி.கார்த்திகேயன், கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, அறங்காவலர் குழுத்தலைவர் இரா.ஜீவானந்தம், இணை ஆணையர்கள் அர.சுதர்சன், திருமதி சி.ஜோதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உதகை மலை ரயில் சேவை நவ. 18 வரை ரத்து!

கோவை, நவ.18–

கோவை மேட்டுப்பாளையம் உதகை மலை ரயில் சேவை வரும் 18ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

மண்சரிவால் ரயில் பாதையில் ஏற்பட்ட பாதிப்புகள் சீரமைக்க ப்படாததால் 18ஆம் தேதி வரை ரயில் ரத்து செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட கிழக்கு பருவமழை காரணமாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், மலை ரயில் பாதையில் தொடர்ந்து மண் சரிவு ஏற்பட்டு வருகிறது.

மலை ரயில் பாதை அமைந்துள்ள கல்லார், ஆடர்லி, ஹில்கிரோ உள்ளிட்ட பகுதிகளில் தொடர் பருவமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன் சீரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவடையாததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக இன்று (18ஆம் தேதி) வரை உதகை மலை ரயில் சேவை நிறுத்தி வைக்கப்படுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

# குடும்பம் குடும்பமாக கொடுக்கிறார்! முதல்வருக்கு கோடி நன்றி!!

## சமூக வலை தளங்களில் வைரலாகும் மூதாட்டியின் நெகிழ்ச்சிமிகு பேட்டி!



**சென்னை , நவ. 18-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களில் பெண்கள் போற்றி வரவேற்கும் திட்டங்கள் மகளிர் இலவச பேருந்து பயணம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டமாகும்.**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம், ஆயிரம் ரூபாய் பெற்ற பயனாளியான முதுபெரும் மூதாட்டி அளித்த நெகிழ்ச்சிமிகு பேட்டி சமூக வலை தளங்களில் வைரலாகி வருகின்றது. அம் மூதாட்டியின் எதார்த்தமான நெகிழ்ச்சிமிகு பேட்டி வருமாறு:-

இன்றைக்கு ஒரு ஆஸ்பத்திரிக்கு, இதர செலவிற்கு, இப்போது ரூபாய் ஆயிரம் வழங்கி முதல்வர் புண்ணியம் செய்து இருக்கிறார். எங்களுக்கு அதுவே போதும்!

*செய்தியாளர் :* தீபாவளி எப்படி போச்சு உங்களுக்கு?

*மூதாட்டி:* சூப்பரா போச்சு, ரூபாய் ஆயிரம் சனிக்கிழமையே பேங்கில் ஏறிடுச்சு! இனி மு.க.ஸ்டாலின் தவிர யாரும் முதலமைச்சராக வர முடியாது, ஆம் இனி யாரும் வர முடியாது!

**திரும்பி அவர்தான்;**

**மறுபடியும் அவர்தான்;**

**மறுபடியும் அவர்தான்;**

**மறுபடியும் அவர்தான்;**

ஜெயலலிதா எத்தனை வருஷம் ஆண்டாங்க; இப்படி பொம்பளைங்களுக்கு கொடுத்தாங்களா?

இன்றைக்கு இவர்தான் (முதல்வர் மு.க.ஸ்டாலின்) குடும்பம் குடும்பமாக கொடுக்கிறார், அப்போ எத்தனை கோடி செலவாகும். அதனை நினையுங்கள்! அந்த காசை நல்லா செலவழிச்சோம், இப்போ எனக்கு கூட ஆயிரம் ரூபாய் வந்தது, அந்தக் காசை கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனேன், ஊசி போட்டேன், திருப்பி காசை அனுப்பச் சொல்லுங்க! முதல்வருக்கு நன்றி! கோடி நன்றி!!

இவ்வாறு மூதாட்டி உரிமையுடன் காசை திருப்பி அனுப்பச் சொல்லுங்கள் என்று கேட்ட வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாகி வருகின்றது.

### திருத்தணி எஸ்.சந்திரன் தலைமை! டி.ஜெ.கோவிந்தராஜன் - எஸ்.சுதர்சனம் - வி.ஜி.ராஜேந்திரன் பங்கேற்பு!

# பொதட்டூர்பேட்டை பி.ஜி.சிவகுமார் இல்லத் திருமண விழா!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. - அமைச்சர் ஆர்.காந்தி - சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வாழ்த்து!

திருவள்ளூர், நவ. 18 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (18.11.2023 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, திருத்தணி, மேட்டுத் தெரு, செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமணம் விழா நாளை (19.11.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிக்கு மேல் நடைபெறுகிறது.

இவ்விழாவில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொதட்டூர்பேட்டை பேரூர் செயலாளர் டி.ஆர். கே.பாபு, திருத்தணி நகர செயலாளர் வி.வினோத் குமார், மாவட்ட பிரதிநிதி கே.எம்.சங்கரன், மா.கீரண், சி.எம்.இரவி, ஜே.டி.சஞ்சய் காந்தி, டி.எம்.சுகுமார், பி. ரவிந்திரநாத், ஜெ.எம். கோவிந்தசாமி, டி.எம்.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, முன்னாள் அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ, இ.ஏ.பி.சிவாஜி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



இவ்விழாவில் இ.எஸ். எஸ்.இராமன், திருத்தணி எம்.பூபதி, ஒ.ஏ.நாகலிங்கம், ஆர்.வினோத்காந்தி, டி.அன்பழகன், கே.ஜி.வி.உமாமகேஸ்வரி, மு.சரஸ்வதி பூபதி, கே.திராவிடபக்தன், வி.சி. ஆர்.குமரன், பா.சிட்டிபாபு, பி.ராஜேஸ்வரி ரவிந்திரநாத், மிதுன் சக்கரவர்த்தி, கிஷோர் ரெட்டி, உதயமலர் பொன்பாண்டியன், ஜெயபால், பொன்.சு.பாரதி, எஸ். ஆர்.செங்குட்டுவன், சி.ஜெ. செந்தில்குமார், ஸ்ரீதர், மு. நாகன், கே.எஸ்.அசோக்குமார், ஜி.ரவீந்திரன், பா. ஆர்த்தி ரவி, என்.கே.கிருஷ்ணன், பி.பழனி, சி.என்.சண்முகம், ஜி.ஜே.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், அன்பரசு, எம். ஜே.ஜோதிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சி, 16 வது வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் பி.எஸ்.சதீஷ்குமார் நன்றி கூறுகிறார்.

# உடன்பிறப்பே... 32

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த அ.பெரியண்ணன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# அ.பெரியண்ணன் : புதுகையின் புலிப்போத்து!



ஓவியம் : ரவி பேலட்

**2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், அதில் ஒருமுறை கட்சி கொறடாவாகவும் சிறப்பாக செயல்பட்டவர் பெரியண்ணன்.**

“அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார்! இது செய்தியல்ல! என் இதயத்தில் மட்டுமல்ல-கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டு விட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி, பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்து, வளர்த்து வலுவூட்டிய புதுக்கோட்டை மாவட்டத்தின் புலிப்போத்து அவர்” என முத்தமிழறிஞர் கலைஞர் புகழ்மாலை சூட்டிய தி.மு.கழகத்தின் ஆற்றல்மிகு தீரர் புதுக்கோட்டை அ.பெரியண்ணன். கலைஞரின் கரங்களால் **‘அண்ணா விருது’** பெற்ற அன்பான உடன்பிறப்பு இந்தப் பெரியண்ணன்.

முத்தமிழறிஞர் கலைஞர் குறிப்பிட்டதுபோல, பெரியண்ணன் வாழ்க்கை பல நெருப்பாறுகளைக் கடந்து வந்ததுதான். அந்த வரலாறு இளையோரை மலைக்க வைக்கும். அறிந்தோருக்கு மீண்டும் வியப்பளிக்கும். ஆம், அந்த வரலாற்றைப் பார்க்கலாம்.

அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் புதுக்கோட்டை அருகில் உள்ள மேலக்கோட்டை என்கிற கிராமம். 1931-ஆம் ஆண்டில், அடைக்கலம் - தெய்வானையம்மாள் ஆகியோரின் மூத்த மகனாகப் பிறந்தார். இவருக்குப் பின் இரண்டு சகோதரர்கள்.

## திரவியம் தேட இலங்கை

ஓரளவு வருமானம் ஈட்டும் விவசாயக் குடும்பம் என்பதால், பெரியண்ணனை திண்ணைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார் அவரது தந்தை. வானம் பார்த்த பூமியில், விவசாயி அதே செல்வாக்குடன் இருந்துவிட முடியுமா என்ன? இவர் உயர்கல்விக்குத் தயாரான நேரத்தில் விவசாயம் நொடித்ததால், குடும்பப் பொருளாதாரத்தில் நெருக்கடி ஏற்பட்டது. அதனால், உயர்கல்வி ஆர்வத்தைக் கைவிட்டுக் குடும்ப பாரத்தைச் சுமக்க டீ தூள் சில்லரை விற்பனையில் இறங்கினார். அதே நேரத்தில் தேச விடுதலை இயக்கங்கள், சுயமரியாதை இயக்கங்களின் அறிமுகம் கிடைக்க, அரசியல் ஆர்வமும் அவரைத் தொற்றிக் கொண்டது.

சொந்தத் தொழிலுடன், அரசியல் செயல்பாடுகளும் இணைய சுயமரியாதை இயக்க நூல்களோடும் ஆட்களோடும் பழகலானார் பெரியண்ணன். இதற்கிடையே தேயிலை மொத்த வியாபாரத்துக்காக இலங்கை செல்ல திட்டமிட்டவர், இந்திய சுதந்திரத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்னர் இலங்கைக்குக் கப்பல் ஏறினார். கூடவே, திராவிடர் கழகச் சிந்தனைகளோடும் அவர் பயணப்பட்டார்.

## இலங்கையில் கழகக் கொடி

இலங்கையில், தான் வசித்த பகுதியில் திராவிடர் கழகச் செயல்பாடுகளை முன்னெடுத்தவர், 1949-ஆம் ஆண்டில் கழகம் உருவானபோது பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியை ஏற்றுக்கொண்டு கழகத்தில் ஐக்கியமானார். இலங்கையில் தி.மு.கழகக் கிளையை உருவாக்கி, அந்தக் கிளையின் துணைச் செயலாளராகச் செயல்படலானார். தலைவர், செயலாளர்கள் எல்லாம் அங்கேயே வசித்தவர்கள். தமிழ்நாட்டிலிருந்து சென்ற இவர், துணைச் செயலாளராக இருந்து அவர்களை இயக்கி இருக்கிறார். அந்த வகையில், இலங்கையில் முதன்முதலில் கழகக் கொடியைப் பறக்க விட்டவர் பெரியண்ணன்.

இலங்கையில் அவர் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டங்களுக்கு நாவலர், பேராசிரியர், ஆசைத்தம்பி, சிற்றரசு என கழகத்தின் முன்னோடிகள் சென்று கொள்கை முழக்கம் செய்து வந்துள்ளனர். இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்களின் முரசமும் இலங்கையில் அன்னாரின் ஏற்பாட்டில் ஒலித்துள்ளது. கழகத்தின் லட்சியங்களை, இலங்கையில் விதைப்பதற்காகத் தனது இளமைக் காலத்தைச் செலவிடலானார் பெரியண்ணன்.

## தமிழர்கள் மீது தார்

இந்திக்கு எதிராகத் தமிழ்நாடு திரண்டதுபோல, இலங்கையில் ‘ஸ்ரீ லங்கா’ என எழுதுவதற்கு, தமிழ் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். ‘ஸ்ரீ’ என்கிற எழுத்தை தார் பூசி அழிக்கும் போராட்டங்கள் நடைபெற்றன. அந்தப் போராட்டங்களில் பெரியண்ணன் பெயர் தவறாமல் இடம்பெற்றது. தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத சிங்கள இனவாதிகள் தமிழர்கள் மீது கொதிக்கும் தாரை ஊற்றி, சித்திரவதைகள் செய்யத் தொடங்கினர். அந்தத் துயரக் கதை பெரியண்ணனுக்கும் நேர்ந்தது.

கொதிக்கும் தார் ஊற்றி, தாக்குதல் நடத்தப்பட்டு உயிர்தப்பிய நிலையில், தேச துரோகக் குற்றத்துக்காக அவரைக் கைது செய்யத் திட்டமிட்டது பண்டார நாயகா அரசு. அன்றைய சூழலில் இலங்கையில் தமிழர்கள் கைது செய்யப்பட்டால், அவர்கள் விசாரணை நீதி மன்றத்தில் நிறுத்துவதற்கு முன் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். அதனால், அங்கிருந்து உயிர்தப்பி, தாய்த் தமிழ்நாடு வந்து சேர்ந்தார் பெரியண்ணன்.

## பெரியண்ணன் ஊட்டிய உணர்வு!

கொள்கைகளோடு சென்றவர், அதே தீரத்துடன் திரும்பி வந்ததும் தனது சொந்த ஊரில் கழகத்தினருடன் இணைந்து செயல்படத் தொடங்கினார். ஆலங்குடியில் அவர் நடத்திய ‘மங்கள விலாஸ் உணவகம்’ கட்சி அலுவலகமாகவே இயங்கியது. அண்ணனின் அந்தத் தொழில் முயற்சி தோல்வி அடைந்தாலும், கழகத்தின் படிப்பகமாக அவரது மேலக்கோட்டையூர் வீடு திகழ்ந்தது மட்டும் நிறுத்தப்படவே இல்லை. அவரது உழைப்பும் ஈடுபாடும் புதுக்கோட்டைப் பகுதியில் கழகத்துக்குப் புத்துயிர் கொடுத்தன.

1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது, ஆலங்குடி தொகுதியில் கே.வி.சுப்பையா வெற்றி பெற்றதற்குப் பின்னால் பெரியண்ணனின் சைக்கிள் பிரச்சாரம் பெரும் பங்கு வகித்தது என்கிறார்கள் கழகத்தினர். கே.வி.சுப்பையா அமைச்சரானதும், புதுக்கோட்டையில் கழகத் தோழர்களின் கூப்பிட்ட குரலுக்கு பெரியண்ணன் முன்பாக நிற்கத் தொடங்கினார்.

## புதுகை உதயத்தின் கர்த்தா

பெரியண்ணனின் கோரிக்கைக் குரலுக்கு செவிமடுத்த பேரறிஞர் அண்ணா, அவர் கேட்டது போல ஓர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆவன செய்ததுடன், தானே வந்து திறந்து வைத்தும் சென்றார். பெரியண்ணனின் கழகத் தொண்டு அவருக்கு ஆலங்குடி வட்ட கழகச் செயலாளர் என்கிற கடமைப் பணியைக் கொண்டு வந்தது. அவரின் பணிகளே அடுத்தடுத்து கோவிலூர் ஊராட்சி மன்றத் தலைவர், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவர் எனச் சுற்றிச் சுழன்று கழகம் இட்டக் கட்டளைகளைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

கடைக்கோடித் தொண்டனின் பெயரையும் அறிந்து, அவரைப் பெருமைப்படுத்திய கழகத் தலைவர் கலைஞர், பெரியண்ணனின் பெருந்தொண்டினை கவனித்துக் கொண்டே இருந்தார். ஒன்றுபட்ட திருச்சி மாவட்டத்தில் இருந்து 1974-ஆம் ஆண்டு, புதுக்கோட்டை பிரிக்கப்பட்டபோது, மாவட்டக் கழகப் பொறுப்பாளராக யாரை நியமிக்கலாம் எனப் பேச்சு வந்தபோது, பெரியண்ணன் வசம் பொறுப்பை ஒப்படைத்தார் கலைஞர்.

கழகத்தின் பொதுக்குழு ஒன்றில், புதுக்கோட்டை மாவட்டம் பிரிக்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்து, அதை கலைஞரின் கவனத்துக்கும் கொண்டு சென்றவர் பெரியண்ணன்தான்.

அதுவரை வட்டச் செயலாளராக இருந்தவர், மாவட்டச் செயலாளர் ஆனதும், மாவட்டம் முழுவதும் கழகக் கிளைகளை வலுவாக்கினார். தொடர்ந்து, 22 ஆண்டுகள் மாவட்டச் செயலாளராக இருந்தார். ‘மாவட்டம்’ என்றால், அது பெரியண்ணன்தான் என்கிற அடையாளம் அவரது அன்பான செயல்பாடுகளால் உருவானது.

## நம்பிக்கைக்குரிய நல்லதம்பி

மிசா காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் பெரியண்ணன். மகனை சிறையில் பார்க்க வந்த அவரது தாயார், திரும்பிச் செல்லும் போது பேருந்து விபத்தில் சிக்கி உயிரிழந்தார். நான்கு நாட்கள் பரோலில் வந்து தாயின் இறுதி மரியாதை நிகழ்ச்சியில் பங்கேற்று, மீண்டும் சிறைக்குச் சென்றார் பெரியண்ணன்.

1972-ஆம் ஆண்டு கட்சியில் ஏற்பட்ட பிளவு, 1993-ஆம் ஆண்டு ஏற்பட்ட பிளவு ஆகியவற்றின்போதும், தொலைபேசி அழைப்பில் கலைஞரின் குரல் “எப்படிய்யா இருக்க?” என்பதாக இருக்கும். பெரியண்ணன் பதிலும், “நான் எப்பவும் போலத்தான் இருக்கேன் தலைவரே” என்பதாக இருந்துள்ளது.

“நான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன். என் தலைவர் கலைஞர். என் பாதை பெரியார் பாதை, அண்ணா தடத்தில் நடந்து வரும் கலைஞரின் பாதை” என மேடைகளில் அவர் குரல் அப்போதெல்லாம் ஓங்கி ஒலித்தது.

“என் நம்பிக்கைக்குரிய நல்ல தம்பி, அவர் கட்டிக்காத்த கொள்கை உறுதி அவர் உருவில் என்றும் நம்முடன் இருக்கும்” என பெரியண்ணன் மறைந்த 1996 நவம்பர் 15 அன்று நினைவுக் குறிப்பை எழுதினார் கலைஞர். அவர் எழுத்துகளைப் போலவே பெரியண்ணன் பெருமையும் என்றும் அழியாது.

**...துடிக்கும்**

## கொள்கை உறவுகள்!

**சு**யமரியாதை இயக்கம் விடுத்த அழைப்பை ஏற்று, முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றவர் சங்கரய்யா. ‘பெரியாரைப் பார்க்காவிடில், கம்யூனிஸ்ட்டாக மாறியிருப்பேன்’ என்று கலைஞர் சொன்ன போது, ‘கூட்டணிக்காகப் பேசுகிறார்’ என்று விமர்சனம் செய்தார்கள்.

திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் இடதுசாரி தலைவர்களுக்குமிடையே இருக்கும் உறவு, கூட்டணிக் கணக்கு அல்ல. கொள்கைப் பிணைப்புதான் என்பதை கலைஞரின் இறுதி ஊர்வலத்தின் போது கண்கலங்கிக் கொண்டே குழந்தை போல் ‘டாட்டா’ காண்பித்த சங்கரய்யாவின் ஒரு புகைப்படம் சொல்லும் ஆயிரம் கதைகளை.

மக்கள் நலக் கூட்டணியால், தோற்றுப் போனபோது கூட கலைஞர் சொன்ன வாசகம் முக்கியமானது. ‘திராவிடக் கட்சிகளைத் தோற்கடிப்போம் என்று சொல்லிக் கொண்டு இடதுசாரிகளே இல்லாத சட்டமன்றத்தை அமைத்து விட்டீர்களே’ என்று கவலைப்பட்டார் கலைஞர். தன்னைத் தோற்கடிக்க இடதுசாரிகள் முயன்றாலும், இடதுசாரிகள் சட்டமன்றத்தில் வேண்டும் என்று கண்ணீர் வடித்தார் கலைஞர். இதுதான் கொள்கைப் பிணைப்பு. இதற்கும் கூட்டணிக் கணக்கிற்கும் தொடர்பே இல்லை.

....பத்திரிகையாளர் ஜீவ சகாப்தன் பதிவு

## ஃப்ளாஷ்பேக்



## பராசக்தி புகைப்படம்!



ஆறுமுகம்

**பா**வலர் பாலசுந்தரம் அவர்களின் கதைக்கு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதி, சிவாஜி கணேசன் நடிப்பில் ‘பராசக்தி’ திரைப்படமாக்கப்பட்டது. கிருஷ்ணன்-பஞ்சு ஆகியோர் ‘பராசக்தி’ திரைப்படத்தை இயக்கினர். என் தந்தை எஸ்.முருகேசன், 50-களில் பல்வேறு திராவிட இயக்க நாடகங்களில் சிவாஜி கணேசனோடு இணைந்து நடித்தவர். 1952-ஆம் ஆண்டு ‘பராசக்தி’ படப்பிடிப்பின் போது பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், சிவாஜி கணேசன் மற்றும் பல்வேறு நாடக கலைஞர்களோடு என் தந்தை அவர்களும் குழுவாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

**-டாக்டர் மு.ஆறுமுகம், துணைத்தலைவர், மாவட்ட மருத்துவ அணி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

## அண்ணாவுக்கு சிகிச்சைச் செலவு!

**1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், கலைஞர் தலைமையில் ஆட்சி அமைந்தது. அப்போது, சட்டமன்றத்தில் அண்ணாவுக்கு அமெரிக்காவிலும் தமிழ்நாட்டிலும் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான செலவினங்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த கலைஞர், செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்ற வாதத்தை அண்ணா ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், ஆகவே தலைமைக் கழகத்தின் சார்பில் நிதி திரட்டப்பட்டு அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பதில் அளித்ததுடன், அதற்கான விவரத்தையும் வெளியிட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 303




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131